## தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2012

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் செலுத்த வேண்டிய மாதாந்த வாடகையான ரூபா 250,333 தொகை கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வேலைப் பகிஷ்கரிப்பு, கலவரங்கள், சிவில் போராட்டம் மற்றும் பயங்கரவாதிகளின் நிதியத்திற்குரிய (S.R.C.C&TF) ரூபா 23,060 பெறுமதியான இருப்பு, தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் சொத்தாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) வேலைப் பகிஷ்கரிப்பு, கலவரங்கள், சிவில் போராட்டம் மற்றும் பயங்கரவாதிகளின் நிதியத்தினதும் (S.R.C.C&TF) அக்ரஹார மற்றும் ஏனைய பிரிவுகளினதும் (NITF) நேர்ச் செலவினம், நேரில் செலவினம் மற்றும் பொதுச் செயற்பாட்டுச் செலவினங்கள் என்பன பொருத்தமான அடிப்படையில் பகிர்வு செய்யப்பட்டு இந்த நிதியத்தின்

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) அலுவலகக் கட்டிடத்திற்காக ரூபா 19,627,418 வருடாந்த வாடகைப் பணத்தில் 91.7 சதவீதம் அல்லது ரூபா 18,000,000 தொகை வேலைப் பகிஷ்கரிப்பு, கலவரங்கள், சிவில் போராட்டம் மற்றும் பயங்கரவாதிகளின் நிதியத்தின் (S.R.C.C&TF) செலவினமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் பதவியணியினருக்காக ஐந்து மாடியிலிருந்தும் ஒட்டுமொத்த அலுவலக் கட்டிடத்தில் 10 சதவீதத்திற்கும் குறைவான அளவே பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ii) ரூபா 12,923,461 கூட்டுதொகையான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிச் செலவினம் முழுவதும் வேலைப் பகிஷ்கரிப்பு, கலவரங்கள், சிவில் போராட்டம் மற்றும் பயங்கரவாதிகளின் நிதியத்தின் (S.R.C.C&TF) செலவினமாக ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iii) ரூபா 7,278,799 கூட்டுத்தொகையான ஊழியர் செலவினம் அக்ரஹார பிரிவு மற்றும் வேலைப் பகிஷ்கரிப்பு, கலவரங்கள், சிவில் போராட்டம் மற்றும் பயங்கரவாதிகளின் நிதியம் (S.R.C.C&TF) போன்ற இரண்டு பிரிவுகளுக்கும் பகிர்ந்து ஒதுக்கக்கூடிய போதிலும் அவ்வாறு செய்யாமல் அந்த முழுச் செலவினத்தையும் அக்ரஹார பிரிவின் செலவினமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iv) மேலும், பொதுவாகச் செலவிடப்பட்ட ரூபா 28,598,307 தொகையான செலவினம் பொருத்தமான அடிப்படையில் மேற்கூறப்பட்ட இரண்டு பிரிவுகளுக்காகவும் பகிர்ந்தளிக்கப்படாமல் முழுச் செலவினமும் அக்ரஹார பிரிவின் செலவினமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(v) அக்ரஹார பிரிவு மற்றும் வேலைப் பகிஷ்கரிப்பு, கலவரங்கள், சிவில் போராட்டம் மற்றும் பயங்கரவாதிகளின் நிதியம் (S.R.C.C&TF) என்ற இரண்டு பிரிவுகளின் கீழ் முறையே ரூபா 1,977,405 தொகை மற்றும் ரூபா 1,432,050 தொகை செலவினமாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அச் செலவினம் உரிய இரண்டு பிரிவுகளுக்கிடையே பகிர்ந்தளித்த அடிப்படை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

வங்கிக் கணக்கில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காசேட்டின் மீதி ரூபா 7,215,904 ஆக இருக்கும் போது அத்திகதியில் காசேட்டின் மீதி ரூபா 1,251,008 ஆகக் கருதி வங்கிக் கணக்கிணக்கக்கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வங்கிக் கணக்கிலும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றிலும் காணப்படுகின்ற மீதிகள் ஒன்றுக்கொன்று இணங்கியிருக்கவில்லை. எவ்வாறாயினும் இது தொடர்பாக விரிவாக ஆராய்ந்த போது நிதியத்தின் தலைவரினால் 2012 மற்றும் அதற்கு முன்னைய வருடத்தில் கணனி முறைமையில் காணப்பட்ட வழுக்களின் காரணமாக இந்த வேறுபாடு ஏற்பட்டிருந்ததாகவும் 2013 ஆம் ஆண்டின் போது அது திருத்தப்பட்டிருந்தமை உறுப்படுத்தப்பட்டதாகவும் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் ஒவ்வொரு விடயங்களுக்கும் எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | |
| (அ) | நிறுவனத்திற்கு உதவிக் கடனின் கீழ் வழங்கப்பட்ட மிகைக் கடன் | 56.78 | (i) கடன் உடன்படிக்கை<br>(ii) அங்கீகாரம் |

| | | |
|---|---|---|
| (ஆ) தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் வங்கிக் கணக்கின் மீதி | 1.11 | மீதி உறுதிப்படுத்தல் |
| (இ) பெறுமானத் தேய்வுச் செலவினம் | | |
| - அக்ரஹார பிரிவு | 7.53 | பெறுமானத்தேய்வு கணிப்பீட்டின் விபரம் |
| - வேலைப் பகிஷ்கரிப்பு, கலவரங்கள், சிவில் போராட்டம் மற்றும் பயங்கரவாதிகளின் நிதியம் | 3.29 | |

**1.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங் ளுடனான இணங்காமைகள்**

கணக்காய்வின் போது பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங் ளுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) கொள்வனவு வழிகாட்டிக் கோவை – 2006 | |
| (i) 4.3.1 மற்றும் 4.3.2 ஆம் பந்திகள் | அலுவலக அறையினை பிரித்து வேறாக்கும் ஒப்பந்தத்திற்காக ரூபா 6,645,584 தொகையான கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிராததுடன் கிரயத்தின் பிரகாரம் கொள்வனவு செயற்பாடுகள் எந்த மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது என்பது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை. |

| | | |
|---|---|---|
| | (ii) 5.2.1 ஆம் பந்தி | ஒப்பந்தம் தொடர்பாக கேள்வியின் செல்லுபடித் தன்மை மற்றும் விளம்பரப்படுத்தும் தன்மைகளை ஏற்றுக்கொள்வதற்குத் தேவையான நிபந்தனை கேள்வி கோரல் பதிவேடுகளில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) 5.6 ஆம் பந்தி | ஒப்பந்தங்கள் தொடர்பான மாதிரிகள் மற்றும் அளவிடைப் பத்திரங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம் | திறைசேரி அங்கீகாரமின்றி நிதியத்தின் ஊழியர்களுக்கு மீளாய்வாண்டின் போது வருடாந்த மிகையூதியக் கொடுப்பனவு மற்றும் ஊக்குவிப்புப் படியாக ரூபா 2,963,334 தொகை மற்றும் ஏனைய படிகளாக ரூபா 3,234,449 தொகை செலுத்தப்பட்டிருந்தன. |
| (இ) | 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 30/2008 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் 02 ஆம் பிரிவு மற்றும் 2012 திசெம்பர் 28 ஆந் திகதிய தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் 157 இன் 4 ஆம் பிரிவு | உத்தியோகத்தர்களின் பத்து மாத அடிப்படைச் சம்பளம் அல்லது ரூபா 250,000 தொகை என்ற இந்த இரண்டில் குறைவான தொகையை, இடர்கடன் ஆகக் கூடியதாகச் செலுத்த வேண்டிய போதிலும் அதற்கு முரணாக ஏழு உத்தியோகத்தர்களுக்கு அந்த எல்லையினை விஞ்சி இடர்கடனாக ரூபா 635,000 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது | 2014 யூலை 21 ஆந் திகதி வரையிலும் நிருவாகக் கைநூல் தயாரிக்கப்பட்டு |

முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 7 அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.
ஆம் பந்தி

**1.4 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பதவி அங்கீகரித்துக் கொள்ளப்படாமல் அல்லது திறைசேரியின் அங்கீகாரமின்றி இரண்டு கிளை அலுவலகங்களில் கிளை முகாமையாளர்களாக சேவையில் ஈடுபடுத்தப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது ஒரு மாதத்திற்கு ரூபா 30,000 படி ரூபா 720,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 1996 மற்றும் 1997 ஆம் ஆண்டுகளில் கொழும்பு கோட்டைக்கு அருகில் ஏற்பட்ட பயங்காரவாதிகளின் குண்டு வெடிப்புக்களில் பாதிப்புக்குள்ளாகிய வணிக நிறுவனங்களை கட்டியெழுப்புவதற்காக சலுகை நிபந்தனைகளின் கீழ் கடன் வழங்க வேண்டிய வணிக நிறுவனங்கள் மற்றும் வழங்க வேண்டிய கடனின் அளவு தொடர்பாக அமைச்சரவைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் போது அதில் குறிப்பிடப்படாத 05 வணிக நிறுவனங்களுக்கு ரூபா 355.1 மில்லியன் கடன் வழங்கப்பட்டிருந்ததுடன் அக்கடன் தொடர்பாக அமைச்சரவையினதோ அல்லது பொதுத் திறைசேரியினதோ அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 2,083,023,167 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,314,699,707 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவுகளில் ரூபா 231,676,540 தொகை குறைவிற்கு முதலீட்டு வருமானம் மற்றும் கடன் வட்டி வருமானம் குறைவடைந்தமை மற்றும் காப்புறுதி இழப்பீடும் நலன் கொடுப்பனவும் அதிகரித்தமை பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் அம்பாந்தோட்டையில் பிரதேச அலுவலகத்தை அமைப்பதற்காக அம்பாந்தோட்டை நகர சபையின் பழைய நூலகக் கட்டிடத்தை வாடகைக்குப் பெற்றிருந்த போதிலும் இது தொடர்பாக நகர சபைக்கும் நிதியத்திற்குமிடையே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. நிதியத்தினால் கட்டிடத்தின் நவீனமயப்படுத்தல் செயற்பாடுகளுக்காக ரூபா 1,489,269 தொகையான செலவினம் செய்யப்பட்டிருந்த போதிலும் கட்டித்தைப் பெற்று 8 மாதகாலமான குறுகிய காலத்தின் பின்னர் கட்டிடத்திலிருந்து அகன்றமையினால் அது ஆக்கபூர்வமானதாக இருக்கவில்லை.

(ஆ) 500 சதுர அடி அளவில் இப் பிரதேச அலுவலகத்திற்கு தேவை எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2011 ஆம் ஆண்டின் இறுதியில் கூடிய இயலளவுடைய 1472 சதுர அடியுடன் உறுஹுணு நிருவாகத் தொகுதிக்கு அலுவலகம் கொண்டு செல்லப்பட்டமையினால் 972 சதுர அடி இட அளவிற்காக ரூபா 991,440 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### 3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அநுராதபுரம் கிளை அலுவலகத்திற்காக கட்டிடமொன்றை வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு கூறுவிலைகள் கோரப்பட்டிருந்ததுடன் ஆகக் குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த ரூபா 16,000 பெறுமதியான கட்டிடத்தைக் கவனத்தில் கொள்ளாது அதனை விட அதிக வாடகையுடைய கட்டிடத்தை மதிப்பீடு செய்வதற்காக ரூபா 11,540 செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஆகக் குறைந்த வாடகையுடன்

உள்ள கட்டிடம் அல்லது மதிப்பீடு செய்யப்பட்ட கட்டிடத்தைக் கவனத்தில் கொள்ளாது ரூபா 25,000 தொகையான மாதாந்த வாடகையின் கீழ் வேறொரு கட்டிடம் வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கிரயம் மற்றும் தேறிய பெறுமதி முறையே ரூபா 5,063,700 மற்றும் ரூபா 2,201,761 தொகையான நிலையான சொத்துக்கள் நிகழ்கால சந்தைப் பெறுமதியுடன் இணக்கஞ் செய்யப்பட்டோ அல்லது மதிப்பீடு செய்யப்படவோ இல்லாது ரூபா 500,000 இற்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது.

**3.3 இனங்காணப்பட்ட நட்டம்**

2011 நவம்பர் மாதத்திற்குரிய ரூபா 113,774 தொகையான ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்புத் தொகை உரிய திகதியில் உள்ளவாறு செலுத்தப்படாமையின் காரணமாக ரூபா 5,689 தொகையான மிகைக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.

**3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

நிதியத்தில் வெற்றிடமான 8 பதவிகளுக்காக உத்தியோகத்தர்களைச் சேர்ப்பதற்கு 2012 சனவரி மாதத்தின் போது செய்திப் பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கும் போது மும்மொழிக் கொள்கை தொடர்பாக கவனம் செலுத்தப்படாது டெய்லி நியூஸ் செய்திப் பத்திரிகையில் மாத்திரம் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த அறிவித்தலின் பிரகாரம் உரிய உத்தியோகத்தர்கள் சேர்க்கப்படாமையினால் அறிவித்தலை பிரசுரிப்பதற்காக செலுத்தப்பட்ட ரூபா 70,200 சிக்கனமற்ற செலவினமாக இருந்தது.

**3.5 பதவியணியினர் நிருவாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் பொது முகாமையாளர் மற்றும் உதவிப் பொது முகாமையாளர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்ட திகதி முதல் 2014 நவம்பர்

14 வரையிலும் அப் பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) அங்கீகரிக்கப்பட்ட ஒன்பது முகாமையாளர் பதவிகள் மற்றும் பதினான்கு உதவி முகாமையாளர் பதவிகள் காணப்பட்ட போதிலும், ஏழு முகாமையாளர் பதவிகளுக்கும் மூன்று உதவி முகாமையாளர் பதவிகளுக்கும் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) அங்கீகாரமின்றி ஆறு பதவிகளுக்காக ஒன்பது உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர்.

(iii) அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப உதவியாளர், தொலைபேசி இயக்குனர் மற்றும் வரவேற்பு உத்தியோகத்தர் மற்றும் மூன்று தொழிலாளர் பதவிகளுக்காக மீளாய்வாண்டின் போது உத்தியோகத்தர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த முகாமைத்துவ உதவியாளர், சாரதி மற்றும் அலுவலக உதவியாளர் பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் 42 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர்.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்விற்காக முகாமையாளரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) கடன்பட்டோர் கட்டுப்பாடு

(இ) கொள்வனவு நடவடிக்கைகள்

(ஈ) மனித வள முகாமைத்துவம்